பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

03 06 2024 **MONDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுவதை ஒட்டி, நாடுமுழுவதும் விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- அனைவருக்கும் ஆரோக்கியம் என்ற செயல்திட்டத்துடன் இந்தியா செயலாற்றி வருவதாக சுகாதாரத்துறை செயலாளர் திரு. அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

- அக்னிபத் திட்டம் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக முப்படைகளின் தளபதி திரு. அனில் சௌகான் கூறியுள்ளார்.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கூட்டம் ஜெனீவாவில் இன்று தொடங்குகிறது.

- பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுவதை ஒட்டி, நாடுமுழுவதும் விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆந்திரா, ஒடிசா சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் மற்றும் சில மாநிலங்களில் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கையும் நாளை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை நிலவரத்தையும் முடிவுகளையும் தேர்தல் ஆணையத்தின் இணையதளமான **www.results.eci.gov.in-**ல் மக்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம் என்றும் வோட்டர் ஹெல்ப்லைன் செயலி மூலமாகவும் வாக்கு எண்ணிக்கை நிலவரத்தை அறிந்து கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் எண்ணும் முகவர்களுக்கான கையேடு ஒன்றையும் ஆணையம் வெளியிட்டுள்ளது, அந்தக் கையேடு தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் உள்ளது.

வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள், வாக்கு எண்ணும் நடைமுறை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் ஒப்புகைச் சீட்டுக் கருவிகள் தொடர்பான விரிவான வழிமுறைகள் ஏற்கனவே இணையதளத்தில் உள்ளதாகத் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்கு எண்ணிக்கை தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் தலைமையில், செய்தியாளர் சந்திப்பு நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் அனைத்து மாநிலங்களிலும் விரிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உத்தரப்பிரதேசத்தில் 80 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை, 81 மையங்களில் நடைபெறவுள்ள மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. நவ்தீப் ரின்ஹா தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தில் மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கையை ஒட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. ஹரீஷ்குமார் குப்தா கூறியுள்ளார்.

ஏற்கனவே, வாக்குப்பதிவின் போது சில இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதை கருத்தில் கொண்டு, தற்போது கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஹரியானாவில் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக, தலைமை தேர்தல் அதிகாரி திரு. அனுராக் அகர்வால், மாவட்ட காவல் கண்காணிப்பாளருடன் நேற்று காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்டார்.

தேவையான இடங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அப்போது அவர் அறிவுறுத்தினார்.

மிஸோரமில் ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. மனுப் வியாஸ் தெரிவித்துள்ளார்.

ஆகாஷவாணிக்கு அவர் அளித்த சிறப்புப் பேட்டியில், மாநிலம் முழுவதும் 13 மையங்களில் வாக்கு எண்ணும் பணி நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

வாக்கு எண்ணும் பணிகளில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் திரு. மனுப் வியாஸ் கூறினார்.

>>>><<<<

மேற்குவங்க மாநிலம், பராசத் மற்றும் மதுராபூர் தொகுதிகளுக்கு உட்பட்ட இரண்டு வாக்குச்சாவடிகளில் இன்று மறுவாக்குப்பதிவு நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கியுள்ள வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

இறுதிகட்ட தேர்தலின்போது, இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

இந்நிலையில் இந்த இரண்டு வாக்குச்சாவடிகளிலும், மறுவாக்குப்பதிவு தேவை என சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கேட்டுக் கொண்டதை அடுத்து, தேர்தல் ஆணையம் மறுவாக்குப்பதிவிற்கு உத்தரவிட்டுள்ளது.

>>>><<<<

அனைவருக்கும் ஆரோக்கியம் என்ற செயல்திட்டத்துடன் இந்தியா செயலாற்றி வருவதாக சுகாதாரத்துறை செயலாளர் திரு. அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற 77வது உலக சுகாதார கூட்டமைப்பின் கூட்டத்தில் நிறைவுரையாற்றிய அவர், உலகம் ஒரே குடும்பம் என்ற சிந்தனையில் இந்தியா செயல்படுவதாக குறிப்பிட்டார்.

கோவிட் காலத்தில் இந்தியா தம்மை பாதுகாத்துக் கொண்டதுடன், பிற நாடுகளையும் பாதுகாக்க உதவியதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச சுகாதார ஒருங்குமுறை நடவடிக்கைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. அபூர்வ சந்திரா வலியுறுத்தினார்.

இதனிடையே, 77வது உலக சுகாதார கூட்டமைப்பின் கூட்டத்தில், சர்வதேச சுகாதார ஒழுங்குமுறை நடைமுறைகளில் திருத்தங்கள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதில் இந்தியா முன்மொழிந்த திருத்தங்களும் ஏற்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் தொற்று நோய்களுக்கான தடுப்பு மற்றும் தயார்நிலையை வலுப்படுத்த முடியும் என்றும் திரு. அபூர்வ சந்திரா தெரிவித்துள்ளார்.

>>>><<<<

நாட்டின் வளர்ச்சியை நோக்கமாக கொண்டு அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமது கன்னியாகுமரி பயணம் மற்றும் தியான அனுபவங்கள் குறித்து நாளிதழ்களுக்கு அவர் எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையில், விவேகானந்தரின் வழியில் அவரது கனவை நனவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கன்னியாகுமரி, தேச ஒற்றுமையின் அடையாளமாக திகழ்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

விவேகானந்தர் நினைவு மண்டபம், திருவள்ளுவர் சிலை, காந்தி மண்டபம், காமராஜர் மணிமண்டபம் ஆகியவை இங்கு உள்ளதை குறிப்பிட்டுள்ள அவர், இவை அனைத்தும் தேசிய சிந்தனையின் சங்கமமாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

140 கோடி மக்களும் தங்களது பொறுப்புகளை உணர்ந்து, நேரத்தை வீணடிக்காமல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி முன்னேற வேண்டும் என்று திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

அக்னிபத் திட்டம் இளைஞர்களுக்கான வாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக முப்படைகளின் தளபதி திரு. அனில் சௌகான் கூறியுள்ளார்.

சிம்லாவில் கடற்படை பயிற்சி தளமான ஐஎன்எஸ் சில்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அக்னிபத் திட்டம் முக்கிய சீர்திருத்தங்களில் ஒன்றாகும் என்று தெரிவித்தார்.

திறன் வாய்ந்த இளைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இத்திட்டம் கவனம் செலுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்திய கடற்படையின் எதிர்கால வீரர்களை வடிவமைப்பதில் ஐஎன்எஸ் சில்கா தளம் முக்கிய பங்காற்றுவதாகவும் திரு அனில் சௌகான் தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

மழை பெய்துள்ள நிலையில் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - குமார் 45 செகண்ட்ஸ்)

>>>><<<<

மணிப்பூரில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

மாநிலத்தில் வெள்ள நிலைமையில் முன்னேற்றம் ஏதுமில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஸ்ஸாமிலும் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>><<<<

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கூட்டம் ஜெனீவாவில் இன்று தொடங்குகிறது.

இன்று தொடங்கும் ஆண்டுக்கூட்டம், வரும் 14ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தொழிலாளர்களின் பாதுகாப்பு, சர்வதேச விதிகள் உள்ளிட்டவை தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

187 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

>>>><<<<

இலங்கையில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டில் கடந்த சில நாட்களாக தலைநகர் கொழும்பு உட்பட ஏழு மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதனால், 19 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கு கனமழை மற்றும் நிலச்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக ஹெலிகாப்டர்கள் தயார் நிலையில் உள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கை முழுவதும் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா — ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 7-5, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் பிரேசிலின் மார்செலோ சோர்மன் - ஆர்லாண்டோ லஸ் இணையை வென்றது.

இரண்டாவது சுற்று ஆட்டத்தில் விளையாட வேண்டிய இணை போட்டியிலிருந்து விலகியதை அடுத்து, ரோஹன் போபண்ணா இணை மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது.

மூன்றாவது சுற்றில் இந்த இணை இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி மெக்சிகோவின் மிகுவல்-வரேலா மார்டினெஸ் இணையை எதிர்கொள்ளவுள்ளது.

>>>><<<<